அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை – 6

மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் –2024

பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள்

விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழையின்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிக்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கப்படும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் ( X) குறியிட்டும் தொடர்ப்பிழைகளை அடிக்கோடிட்டும் ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிக்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே ✓ குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடை இருப்பின் “ மிகை “ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் “ மீண்டும் “ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

# பகுதி – I

**மொத்த மதிப்பெண்கள் – 90**

| வ. எண் | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் | | மதிப்பெண் 14 x 1 = 14 |
|---|---|---|---|
| 1 | (இ) | நாவைக் காக்காதவர் | 1 |
| 2 | (ஈ) | வால்ட் விட்மன் | 1 |
| 3 | (அ) | கடல் + அலை – உயிர் + மெய் | 1 |
| 4 | (ஆ) | (1) - (ii), (2)- (iv), (3) – (i), (4) – (iii) | 1 |
| 5 | (ஈ) | இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன் | 1 |
| 6 | (இ) | மார்ச் 20 | 1 |
| 7 | (ஆ) | உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி | 1 |
| 8 | (ஈ) | கூற்றும் சரி, விளக்கமும் சரி | 1 |
| 9 | (ஆ) | வினை | 1 |
| 10 | (அ) | பாடாண் திணை | 1 |
| 11 | (இ) | மாமுன் நேர் | 1 |
| 12 | (அ) | சிவகாமியின் சரிதம் | 1 |
| 13 | (ஆ) | (i) மட்டும் சரி | 1 |
| 14 | (அ) | 22 | 1 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

## பகுதி – II

### ( பிரிவு – 1 )

| வ. எண் | எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. | மதிப்பெண் 3 x 2 = 6 |
|---|---|---|
| 15 | <u>காவில் முகில் தொகை ஏறும்</u><br>• சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும் | 2 |
| 16 | படைக்கு பாதுகாப்பாக இருப்பவை<br>• வீரம்<br>• மானம்<br>• முன்னோர் வழியில் நடத்தல்<br>• நம்பிக்கைக்கு உரியவர் ஆதல். | 2 |
| 17 | • அகநானூறு மூன்று பிரிவுகளைக் கொண்டது<br>• களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை | 1<br>1 |
| 18 | நாங்கூழ்ப் புழுவைக் (மண்புழு) குறிப்பிடுகிறது. | 2 |

### ( பிரிவு – 2 )

| வ. எண் | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. | மதிப்பெண் 2 x 2 = 4 |
|---|---|---|
| 19 | • எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருப்பது.<br>• எழுதும் கையைக் காட்டிலும், பேசும் வாய் உணர்ச்சி வெளிப்பாட்டை கண்முன் கொண்டு வருவது | 1<br>1 |
| 20 | • தஞ்சை பெரிய கோவில் தட்சண மேரு என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்படுகிறது.<br>• இதன் விமானம் 216 அடி, கருவறை 13 தளங்களைக் கொண்டது. | 1<br>1 |
| 21 | • தமிழ் – ஆட்சிமொழி, பயிற்று மொழி, இலக்கிய மொழி<br>• அப்போதுள்ள அரசியல் சுதந்திரத்தால் நாடெங்கும் ஆட்சி, கல்வி, வாணிகம் – பொதுமொழி | 2 |

### ( பிரிவு – 3 )

| வ. எண் | எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. | மதிப்பெண் 7 x 2 = 14 |
|---|---|---|
| 22 | மொழி இறுதி எழுத்துக்கள் – 24<br>உயிர் – 12<br>மெய் –11 (ஞ், ண்,ங், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்)<br>குற்றியலுகரம் – 1 | 1<br>1 |

www.Padasalai.Net


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 23 | **பகுபத உறுப்பிலக்கணம்**<br>**(அ) ஈன்ற – ஈன் + ற் + அ**<br>ஈன் – பகுதி<br>ற் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி<br>**(அல்லது)**<br>**(ஆ) முளைத்த – முளை+த்+த்+அ**<br>முளை – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்த கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | 1<br><br>1 |
| 24 | **புணர்ச்சி விதி**<br>**(அ) அரும் பொருள் – அருமை + பொருள்**<br>அருமை + பொருள் – ஈறுபோதல்<br>அரு + பொருள் – இனமிகல்<br>**(அல்லது)**<br>**(ஆ) மணிக்குலம் – மணி + குலம்**<br>மணி + குலம் – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | 1<br>1 |
| 25 | **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**<br>(அ) குயில் <u>கூவ,</u> நாய் <u>குரைத்தது</u><br>(ஆ) சோறு <u>உண்டு,</u> நீர் <u>குடித்தான்</u> | 1<br>1 |
| 26 | **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**<br><u>குரைக்கின்ற</u> நாயைக் <u>குறைத்து</u> மதிப்பிடாதே<br>**(பொருத்தமான தனித்தனித் தொடர்கள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 27 | **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**<br>(அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்<br>(ஆ) தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர் | 1<br>1 |
| 28 | **திருத்தக் குறியீடுகளின் வகைகள்**<br>• பொதுவானவை<br>• நிறுத்தக் குறியீடுகள் தொடர்பானவை<br>• இடைவெளி தர வேண்டியவை<br>• இணைக்க வேண்டியவை<br>• எழுத்து வடிவம்<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 29 | **கலவைத் தொடராக மாற்றுக**<br>மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறையாதலால், மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். | 2 |
| 30 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.**<br>• **வைகை –** வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.<br>• **வை கை –** சேற்றில் கால் வைத்தால் தான் சோற்றில் கை வைக்க முடியும்.<br>**(அல்லது)**<br>• நஞ்சிருக்கும்<br>நஞ்சிருக்கும் துணியை உடுத்தினால் கிழிந்து போகும்<br>• நஞ்சு இருக்கும்<br>நல்லப் பாம்பின் வாயில் நஞ்சு இருக்கும்<br><br>**(பொருத்தமான வேறு தொடர்கள் சேர்த்தும், பிரித்தும் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

**பகுதி – III**

**( பிரிவு – 1)**

| **வ. எண்** | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** | **மதிப்பெண் 2 x 4 = 8** |
|---|---|---|
| 31 | **நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுவன–**<br>• நூலின் இயல்பு<br>• ஆசிரியரின் இயல்பு<br>• கற்பிக்கும் முறை<br>• மாணவர் இயல்பு<br>• கற்கும் முறை<br>• நூலாசிரியர் பெயர்<br>• நூல் பின்பற்றிய வழி<br>• நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு<br>• நூலின் பெயர், தொகை, வகை, விரி<br>• நூலில் குறிப்பிடப்படும் கருத்து<br>• நூலைக் கேட்போர்<br>• நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்<br><br>**(ஏதேனும் எட்டுக் கருத்துகள் இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

<table>
<tr><td>32</td><td>'உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்' – இடம்சுட்டிப் பொருள் விளக்கம்<br>இடம் :<br>நூல் : புரட்சிக்கவி<br>ஆசிரியர் : பாரதிதாசன்<br><br>பொருள் : உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள்<br><br>விளக்கம்: வேந்தன் தன்னை அழைத்ததற்கும் அமுதவல்லி காதலித்ததற்கும் தமிழே காரணம். என் உயிர் போவதற்கும் தமிழ்தான் காரணம் என்று சமுதாயம் நினைத்துவிடக் கூடாது. என் அன்னைத் தமிழுக்குப் பழிவந்தால் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. எனவே, மாசில்லாத தமிழை உயிர் என்று போற்ற வேண்டும் என்று உதாரன் வேண்டிக் கொண்டான்.</td><td>1<br><br>1<br><br>2</td></tr>
<tr><td>33</td><td>அலகிட்டு வாய்பாடு :<br><br><table><tr><th>சீர்</th><th>அசை</th><th>வாய்பாடு</th></tr><tr><td>நாச்/செற்/று</td><td>நேர் நேர் நேர்</td><td>தேமாங்காய்</td></tr><tr><td>விக்/குள்/மேல்</td><td>நேர் நேர் நேர்</td><td>தேமாங்காய்</td></tr><tr><td>வா/ரா/முன்</td><td>நேர் நேர் நேர்</td><td>தேமாங்காய்</td></tr><tr><td>நல்/வினை</td><td>நேர் நிரை</td><td>கூவிளம்</td></tr><tr><td>மேற்/சென்/று</td><td>நேர் நேர் நேர்</td><td>தேமாங்காய்</td></tr><tr><td>செய்/யப்</td><td>நேர் நேர்</td><td>தேமா</td></tr><tr><td>படும்</td><td>நிரை</td><td>மலர்</td></tr><tr><td colspan="3">இக்குறட்பா, 'மலர்' என்னும் வாய்பாட்டால் முடிந்துள்ளது</td></tr></table></td><td>4</td></tr>
<tr><td>34</td><td>வாய்க்காலின் சிறப்புகள்<ul><li>உணவைக் கொடுக்கும் வயல்களுக்குப் பயன்படுவது இச்சிறு வாய்க்கால்</li><li>இது கடலை மலையாகவும், மலையை அலை கடலாகவும் மாற்றி அமைக்கின்றது.</li><li>கற்களை நெறு நெறு என்று தேய்த்து சிறு பொடியாக்குகிறது.</li><li>தன் வல்லமைக்கு உட்பட்ட மண், கல் ,புல், புழு ஆகியவற்றுள் இன்னப் பொருளைத்தான் இழுத்துச் செல்வது என்று இல்லாமல் எல்லாவற்றையும் தனக்குள்ளே அகப்படுத்திக் கொள்கிறது.</li><li>மீண்டும் மீண்டும் வேகமாக எழுந்து தன் வழக்கமான பயணத்தை இரவுபகல் பாராமல் தொடர்கிறது.</li><li>வாய்க்காலைப் போல் ஊக்கத்தோடும் உறுதியோடும் உழைப்பவர் எவரும் இலர்.</li></ul>( எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)</td><td>4</td></tr>
</table>


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

(பிரிவு – 2)

| வ. எண் | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. | மதிப்பெண் 2 x 4 = 8 |
|---|---|---|
| 35 | • மக்கள் துன்பப்படும் போது புதுவைக்கு கப்பல்கள் வந்த செய்தியைக் கேட்டதும்.<br>• நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தது போலவும்<br>• மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்<br>• நீண்ட நாள் தவமிருந்து புத்திர பாக்கியம் கிட்டினாற் போலவும்<br>• தேவாமிர்தத்தை சுவைத்தது போலவும் மக்கள் சந்தோசித்தார்கள் என்று வர்ணிக்கிறார்.<br>**(எவையேனும் ஒரு வருணணைத் திறன் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 36 | • உழப்படாத நிலம்<br>• வேதியியல் உரமில்லாத உற்பத்தி<br>• பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு<br>• தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி<br>• ஒட்டு விதையில்லாத உயர் விளைச்சல் | 4 |
| 37 | **தமிழ் இலக்கியங்களில் கல்வி :**<br>• **"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"** – புறநானூறு<br>• **"துணையாய் வருவது தூய நற்கல்வி"**– திருமந்திரம்<br>• **"கல்வி அழகே அழகு"** – நாலடியார்<br>• **"இளமையில் கல்"**– ஆத்திச்சூடி<br>• கற்பிக்கும் இடங்களைப் **'பள்ளி'** என்று **'பெரிய திருமொழி'** கூறுகிறது.<br>• கற்பிக்கும் இடங்களை **'ஓதும்பள்ளி'** என்று **'திவாகர நிகண்டு'** கூறுகிறது.<br>• கற்பிக்கும் இடங்களைக் **'கல்லூரி'** என்று **'சீவகசிந்தாமணி'** கூறுகிறது.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 38 | **கொற்கை, வஞ்சி, தொண்டி – வளாகம் :**<br>• கொற்கை, வஞ்சி, தொண்டி ஊர்ப்பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.<br>• இப்பெயர்கள் சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கு ஆணிவேர்<br>• இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை. | 4 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | • சங்ககாலத் தமிழ் மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள் போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதியில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.<br>• இவைகள் காட்டும் பொதுத் தன்மைகள் மிக முக்கியமானவை<br>• இவை கடந்தகால வரலாற்றின் அடையாளச் சின்னங்கள்<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | |

**( பிரிவு – 3 )**

| வ. எண் | எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. | மதிப்பெண் 3 x 4 = 12 |
|---|---|---|
| 39 (அ) | **சொற்பொருள் பின்வரு நிலையணி**<br>**அணி இலக்கணம்**<br>வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வரு நிலையணி எனப்படும்.<br>சான்று<br>**“ வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் செயல்”**<br>**அணிப்பொருத்தம்**<br>இக்குறளில் வலி என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வலிமை என்ற ஒரேப்பொருளை தருவதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும் | 2<br>1<br>1 |
| | **(அல்லது)** | |
| ஆ) | **இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும்**<br>**அணி சுட்டல் :** உருவக அணி<br>**அணி இலக்கணம்:–**<br>செய்யுளில் உவமையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுப்படுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக் கூறுவது உருவக அணி ஆகும்.<br>**அணிபொருத்தம் :**<br>பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு கொடாமை எனும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்று உருவப்படுத்தப்பட்டுள்ளது.<br>**(பொருத்தமான சான்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br>1<br>1 |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக**<br>மையக்கருத்து, திரண்ட கருத்து, எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை<br>**(மையக்கருத்துடன் எழுதி ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 41 | **பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புப்படுத்தி எழுதுக**<br>**அ).** சிறு துரும்பும் பல்குத்த உதவும் **(அல்லது)**<br>**ஆ).** வினை விதைத்தவன் வினை அறுப்பான்<br>தினை விதைத்தவன் தினை அறுப்பான்<br>**பழமொழி விளக்கம்**<br>**வாழ்க்கை நிகழ்வு (கதை)** | <br><br><br><br>1<br>3 |
| 42 | தா – வேர்ச்சொல்<br>தந்தான் – வினைமுற்று<br>தந்து – வினையெச்சம்<br>தந்த – பெயரெச்சம்<br>தந்தவன் / தந்தவர் – வினையாலணையும் பெயர்<br>**(பொருத்தமான வேறு தொடர்கள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | <br>1<br>1<br>1<br>1 |
| 43 | **தமிழாக்கம் தருக**<br>1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல<br>2. தன்கையே தனக்கு உதவி<br>3. பழிக்குப் பழி<br>4. வரும் முன் காப்பதே சிறந்தது (அல்லது) வெள்ளம் வரும் முன்னே அணை போடு | <br>1<br>1<br>1<br>1 |
| 43 | **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**<br>i. சி.வை. தாமோதரனார்<br>ii. பெர்சிவல் பாதிரியார்<br>iii. "நீதிநெறி விளக்கம்" என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டதால் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தார்<br>iv. 1884 | <br>1<br>1<br>1<br><br>1 |

## பகுதி – IV

| வ. எண் | எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. | மதிப்பெண் 3 x 6 = 18 |
|---|---|---|
| 44(அ). | (i) உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை<br>(ii) உரிய காலம், பொருத்தமான இடம், அறிந்து செயல்புரிதல்.<br>(iii) உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்காகக் காத்திருப்பர்<br>(iv) அரிய காலம் வாய்த்தால், முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்தல். | 6 |
| | **( அல்லது )** | |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

<table>
<tr><td>(ஆ).</td><td><u>புல்லின் பரிவு</u><ul><li>சிறு புல்லே! நாளும் இலக்கோடு வளர்கிறாய்.</li><li>தேன்துளிகளை ஈக்களுக்கு விருந்தளிக்கிறாய்.</li><li>மகரந்தம் பரப்பிக் காய்களை உருவாக்குகிறாய்.</li><li>துறட்டி என்னும் அமைப்பில் வடிவமைத்து வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கிறாய்.</li></ul><u>வாய்க்காலின் ஆற்றல்</u><ul><li>வாய்க்காலே ! அலைவீசும் கடலை மலையாக மாற்றுகிறாய்.</li><li>மலையை அலை வீசும் கடலாக மாற்றுகிறாய்.</li><li>செல்லும் பாதையில் மண், கல், புல், புழு அனைத்தையும் அரைத்து தூளாக்குகிறாய்.</li><li>காலமாகிய தச்சனுக்கு பயன்படுமென உருட்டிக்கொண்டு ஓடுகிறாய்.</li></ul><u>நாங்கூழ்ப் புழு</u><ul><li>நாங்கூழ்ப் புழுவே ! உழவர்க்கெல்லாம் அரசனாக இருக்கிறாய்.</li><li>உழுது மண்ணைப் பண்படுத்துகிறாய்.</li><li>எறும்புக்கும் கோடான கோடி பூச்சிக்கும் வாழ்வைத் தருகிறாய்.</li></ul>(இவற்றில் ஏதேனும் பொருத்தமான ஆறு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)</td><td>6</td></tr>
<tr><td>45<br>அ).</td><td>பேச்சுமொழியும், எழுத்துமொழியும்<ul><li>எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு அருகில் உள்ளது.</li><li>கவிஞனின் கவிதையின் மொழி பேச்சுமொழிக்கு திரும்பியவுடன் அதிக வெளிப்பாட்டு சக்தி கொண்டதாக மாறுகிறது.</li><li>எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது. வாய், கை ஆகியவை உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது.</li><li>எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.</li><li>பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு.</li><li>பேச்சு என்பது மொழியில் நீந்துவது.</li><li>பேச்சு மொழி – மேல்தோல்</li><li>எழுத்து மொழி – மேலாடை</li><li>பேச்சு மொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கிறது.</li><li>கவிஞர்கள், எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைப்பதையே நேரடி மொழி எனக் கருதினர்.</li></ul>( இவற்றில் ஏதேனும் ஆறு கருத்துக்கள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)</td><td>6</td></tr>
</table>


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| (அல்லது) | | |
| ஆ) | • ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்தது.<br>• பண்பாடு, சமயம், சாதி, நீதி, நம்பிக்கை முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.<br>• நீதி வழங்குதல், தண்டனை வழங்குதல் ( காது அறுத்தல், சாட்டை அடி, கிடங்கில் போடுதல்) போன்ற பதிவுகள் இவரது நாட்குறிப்பில் உண்டு.<br>• கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்தது.<br>• புதுச்சேரியில் பேரிடர் நிகழ்ந்தபோது ஒழுகரையிலே கனகராயர் பெருஞ்சோறு அளித்ததை பதிவு செய்துள்ளார்.<br>• எட்டு மாற்றுக் குறைவான நாணயங்களை வைத்திருப்பது குற்றம்.<br>• பல்வேறு விதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.<br>• ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.<br>• துணிகள், வர்த்தகருக்கு விற்கப்படும் போது இரசீது பெறப்பட்டது<br>**(ஆனந்தரங்கர் நாட்குறிப்பு தொடர்பான செய்திருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |
| 46 அ) | யானை டாக்டர்<br>**(யானை டாக்டர் குறும்புதினம் தொடர்பான கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |
| (அல்லது) | | |
| ஆ) | • 'சிம்பொனித் தமிழர்' இளையராஜா பிறப்பு<br>• இளையராஜாவும் – திரை இசையும்<br>• திரையிசையில் – பழந்தமிழிசை<br>• இளையராஜாவின் இசைத் தொகுப்புகள்<br>• பெற்ற விருதுகள்<br>• இளையராஜாவின் இசை நுணுக்கம்<br>• 'ஆஸ்கர் தமிழர்' ஏ. ஆர். ரகுமான் – இசை ஆர்வம்– கல்வி<br>• துள்ளல் ஓசையும் இரகுமானும்<br>• இசையில் பண்பாட்டுக் குறியீடு<br>• பெற்ற விருதுகள்<br>**(இது போன்ற இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்து வழங்கியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

## பகுதி – 5

| வ. எண் | அடிபிறழாமல் எழுதுக | மதிப்பெண் 4 + 2 = 6 |
|---|---|---|
| 47 (அ). | அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக<br><br>"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு<br>தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி<br>நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்<br>நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள் ?<br>கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்<br>கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை ?<br>பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்<br>போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு ?<br>– பாரதிதாசன். | 4 |
| (ஆ) | " உலகு " எனமுடியும் குறள்<br><br>நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்<br>பெருமை உடைத்துஇவ் வுலகு | 2 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com